குளித்தலை தொகுதி தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. மறைந்த கந்தசாமி அவர்களின் திருஉருவப்படத்தை அமைச்சர் கே.என்.நேரு குளித்தலையில் அவரது இல்லத்தில் திறந்து வைத்து மரியாதை செலுத்தினார். குளித்தலை எம்எல்ஏ மாணிக்கம், முன்னாள் எம்.எல்.ஏ. ராமர், தலைமை செயற்குழு உறுப்பினர் சிவராமன், வர்த்தக அணி துணைச் செயலாளர் பல்லவி ராஜா, காங்கிரஸ் மூத்த தலைவர் திருச்சி வேலுச்சாமி, நகர் மன்ற தலைவர் சகுந்தலா, அரசு வழக்கறிஞர் சாகுல் அமீது, பாலன் ஆகியோர் உடன் உள்ளனர்.

# வெட்டுக்காடு பொதுப் பணித்துறை ஆய்வு மாளிகை புதியதாக கட்டப்படுமா?

## சட்டப்பேரவையில் திருவையாறு துரை. சந்திரசேகரன் கேள்வி!

**சென்னை, ஏப்.21-**

**சட்டப்பேரவையில் திருவையாறு தொகுதி உறுப்பினர் துரை. சந்திரசேகரன் கேட்ட கேள்வியும் அக்கேள்விக்கு அமைச்சர் எ.வ.வேலு அளித்த பதிலும் வருமாறு:**

**துரை. சந்திரசேகரன்:** தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெட்டுக்காடு பொதுப் பணித் துறையினுடைய ஆய்வு மாளிகை ஓட்டு கட்டடம் இடிந்துள்ளது. புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் எ.வ. வேலு:** அவர் குறிப்பிடுகிற, அதை புதுப்பிப்பது என்பது அந்த அடிப்படையிலும் சரி, தொடர்ந்து சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஆய்வு மாளிகை அமைக்க வேண்டுமென்ற பல்வேறு கோரிக்கைகள் எல்லாம் தொடர்ந்து, இந்த ஆய்வு மாளிகை குறித்து முன்னுரிமை கொடுத்து அனைவரும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

எங்களுடைய மூத்த அமைச்சர் கே.என். நேரு அவர்கள் கூட திருச்சியிலே கூடுதலாக மாளிகை கட்ட வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் பொதுவாகவே திருச்சியில் இறங்கிதான் அந்தப் பகுதியில் காவிரி டெல்டா பகுதி போன்ற பகுதிக்கு பெரும்பான்மையான அமைச்சர்கள், சம்பந்தப்பட்ட I.A.S அதிகாரிகள் எல்லாம் அங்கே flightல் இறங்கிதான் போகவேண்டும். அதனால் கூடுதலாக தேவை என்ற ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது.

அதனைத் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கடிதம் கொடுத்திருக்கிறார்கள். எனவே, ஒன்றன்பின் ஒன்றாக அதையெல்லாம் ஒருங்கிணைத்து முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வந்து இந்த ஆண்டு எதையெதை எல்லாம் எடுக்க முடியுமோ அதற்கு முன்னுரிமை கொடுத்து எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

### பூம்புகார் தொகுதி - குத்தாலம் ஒன்றியம்-

# கங்காதரபுரத்தில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்!

## சட்டப்பேரவையில் நிவேதா எம். முருகன் கோரிக்கை!

**சென்னை, ஏப்.21-**

**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது பூம்புகார் நிவேதா முருகன் கேட்ட கேள்வியும் அக்கேள்விக்கு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அளித்த பதிலும் வருமாறு:**

**நிவேதா எம். முருகன்:** மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், கங்காதரபுரத்தில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம் கங்காதரபுரத்தில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**நிவேதா எம். முருகன்:** பூம்புகார் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், கங்காதரபுரம் ஊராட்சியில் வேளாண்மை விற்பனைக் கூடம் அமைக்க வேண்டுமென விவசாயிகள் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது. இது குறித்து பலமுறை சட்டமன்றத்தில் பேசியுள்ளேன். தொகுதி முதலமைச்சர் UTM திட்டத்திலும் தந்துள்ளேன். எங்கள் பகுதி விவசாயத் தொழிலை மட்டுமே நம்பியுள்ள பகுதி. சுமார், அந்தப் பகுதியில் மட்டும் 3,300 ஏக்கர் விவசாய நிலங்களை உள்ளடக்கிய பகுதி. கிராமங்களைப் பொறுத்தவரையில் பாலையூர், நக்கம்பாடி, கோனேரி ராஜபுரம், கோரிமங்கலம், சிவனாகரம், மாந்தை, எழுமகளூர் என சுமார் 30க்கும் மேற்பட்ட ஊராட்சிகள் கொண்ட பகுதி. தற்போதுள்ள வேளாண்மை விற்பனைக் கூடம் கிட்டத்தட்ட 20 கிலோமீட்டருக்கு மேல் செல்ல வேண்டியுள்ள காரணத்தால்,

இந்நிலையில், கங்காதரபுரம் ஊராட்சியில் ஐந்து ஏக்கர் நிலம் வேளாண் விற்பனைக் கூடம் அமைப்பதற்காக கையகப்படுத்தப் பட்டுள்ளது. வேளாண்மைத் துறை அதிகாரிகளும் அதை பார்த்து செய்து தருவார்கள் என்ற காரணத்தினால் அமைச்சரிடமும் கூறியிருக்கிறேன். எனவே, அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அதை அமைத்துத் தர முன்வர வேண்டுமென்று தாங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்:** மயிலாடுதுறை மாவட்டத்திலே கிட்டத்தட்ட குத்தாலம், மயிலாடுதுறை, செம்பனார்கோவில், சீர்காழி ஆகிய நான்கு இடங்களில் நான்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் இருக்கின்றது. அவற்றில் கிட்டத்தட்ட ஆண்டிற்கு 14,970 மெட்ரிக் டன் வரத்து வந்து கொண்டிருக்கிறது. அதேபோல மொத்த வரத்து மதிப்பு கிட்டத்தட்ட 45 கோடி அளவிற்குதான் அங்கு transaction நடக்கிறது. அதனால், 10,502 விவசாயிகள் பயன்பெற்று கொண்டிருக்கிறார்கள். கங்காதரபுரம் கிராமத்திலே தற்சமயம் அமைப்பதற்கு வேண்டிய சூழல் அங்கு இல்லை. ஏனென்றால் தஞ்சை டெல்டா பகுதியில் நெல் கொள்முதல் செய்கின்ற 178 Civil Supplies Corporation மூலமாக, Tamil Nadu Civil Supplies Corporation (TNCSC) மூலமாக நெல்லை கொள்முதல் செய்கின்றார்கள்.

அதேபோல தஞ்சை மாவட்டத்தில் டெல்டா பகுதியில் அதிகமாக நெல்லைத் தவிர மற்ற மாற்றுப் பயிர்கள் பருத்தி, இந்த seasonல், கோடைகாலத்தில் பருத்தி போடலாம். மற்ற மாற்றுப் பயிர்கள் எள், கடலை எல்லாம் அதிக விவசாயிகள் உற்பத்தி செய்யவில்லை. செய்ய வேண்டுமென்று நாங்கள் கூறிக் கொண்டிருக்கிறோம். ஆனால், அதுபோன்ற நிகழ்வு ஏற்படும்போது தேவைப்படின் அந்த இடத்தில் உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று பரிசீலிக்கப்படும் .

**நிவேதா எம். முருகன்:** எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரை வேறு எந்தத் தொழிலுமே கிடையாது. விவசாயத்தை மட்டுமே கொண்ட ஒரே மாவட்டம் எங்கள் மாவட்டம். வேறு எந்தத் தொழிலுமே கிடையாது. அமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலித்து வேளாண்மை விற்பனைக் கூடம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், எனது பூம்புகார் தொகுதியில் செம்பனார் கோவில் ஒன்றியம் தோட்டக்கலைப் பண்ணை அமைக்க வேண்டுமென்று கூறுகிறேன். ஏனென்றால் எங்கள் மாவட்டத்திற்கு வேண்டிய நாற்று அனைத்தும் தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து, நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வண்டுவாஞ்சேரியிலிருந்து வர வேண்டியுள்ளது. தூரம் அதிகமாகவுள்ள காரணத்தினாலும், எங்கள் மாவட்டத்திலே தில்லையாடி ஊராட்சியில் நாவல்தோப்பு என்ற இடத்தில் இடமும் உள்ளது.

அதேபோல, திருக்கடையூர் ஊராட்சியில் வேளாண்மைத் துறைக்கு சொந்தமான நிலங்களும் அதிகமாக உள்ளன. ஆகையினால், பின்தங்கிய விவசாய மாவட்டமான எனது மாவட்டத்திற்கு தோட்டக்கலை பண்ணை மற்றும் வேளாண் அறிவியல் நிலையத்தினை கொண்டு வருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** எங்கள் ஊரின் ஆற்றிற்கு மறு பகுதியில்தான் உறுப்பினர் அவர்கள் சொன்ன ஊர் இருக்கிறது. அங்குள்ள விவசாயிகளை நெல்லுக்கு மாற்றாக வேறு பயிர்களை பயிரிட வேண்டுமென்று நாங்கள் கூறி வருகின்றோம். நெல் பயிரினைவிட்டால் வேறு விவசாயமும் இல்லை. செம்பனார்கோயில் பகுதியிலே தோட்டக்கலை பண்ணை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதுகுறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த மாவட்டம் அதிகமாக விவசாயிகள் உள்ள மாவட்டம்தான். கரும்பினை மாற்றுப் பயிராகக் கொண்டு வந்தார்கள். இப்போது கரும்பிற்கும் உரிய விலை கொடுத்து, அதிகமாக கரும்பு பயிரிடப்படுகின்ற ஒரு சூழலை ஏற்படுத்தி கொண்டிருக்கின்றோம். ஆகவே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கங்கதரபுரத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைப்பதற்குரிய வாய்ப்பு பிற்காலத்தில் பரிசீலிக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

### மண்டல வாரியாக தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் ஆய்வுக்கூட்டம்!

## மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

சென்னை, ஏப்.21-

மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு;

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நீலகிரியில் நடந்த மாணவர் அணியை மேம்படுத்துவது குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவினைத் தொடர்ந்து, "மண்டல வாரியாக மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம்" இன்று (21.04.2025) காலை 9.30 மணிக்கு மாணவர் அணி மாநில துணைச் செயலாளர் ஜெ.ராமகிருஷ்ணன் முன்னிலையில், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழக அலுவலகமான பவளவிழா மாளிகையில் காஞ்சிபுரம் தெற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, விழுப்புரம் மத்திய, திருப்பத்தூர், வேலூர் ராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களின் மாவட்ட, மாநாகர அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம் மற்றும் புதுச்சேரி மாநில அமைப்பாளர் துணை அமைப்பா ளர்கள் ஆய்வுக்கூட்டமும் நடைபெறவுள்ளது.

மேற்கண்டவாறு நடைபெறுயம் ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட, மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மற்றும் புதுச்சேரி மாநில அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் தவறாது கலந்துகொள்வதோடு, கூட்டத்திற்கு வரும் மாவட்ட, துணை அமைப்பாளர்கள் தத்தமது அமைப்பின் நடவடிக்கைக் குறிப்பேட்டினை (மினிட் புத்தகம்) தவறாது கொண்டு வர வேண்டும்.

அத்துடன், இதுவரை செய்த செயல்திட்டங்கள் குறித்த புகைப்படத் தொகுப்புகளை அவசியம் கொண்டு வர வேண்டும். அத்துடன் கல்லூரிகள் கட்டமைப்பின் தகவல்களையும் கொண்டு வர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### திருவரங்கம் நகரப்பேருந்து நிலையம்

# காவிரி ஆற்றின் குறுக்கே ரூ.106 கோடியில் புதிய பாலம்!

## சட்டப்பேரவையில் மொ.பழனியாண்டி பேச்சு!

**சென்னை, ஏப்.21-**

**சட்டப்பேரவையில் சுற்றுலா மற்றும் இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையில் திருவரங்கம் தொகுதி உறுப்பினர் மொ. பழனியாண்டி பேசுகையில் காவிரி ஆற்றின் குறுக்கே ரூ. 106 கோடி மதிப்பில் புதிய பாலம் அமைத்து கொடுத்த முதல்வருக்கு நன்றி என்று தெரிவித்தார்.**

இது குறித்து மொ. பழனியாண்டி பேசியதாவது:-

தமிழ்கூறும் நல்லுலகில் தன்னிகரில்லா தலைவர், இந்தியாவின் தலைசிறந்த முதலமைச்சர், என் உயிரினும் மேலான கழகத் தலைவர் அவர்களுக்கும், கழகத்தின் இளம் தலைவர் எங்களின் எதிர்காலம், 100 ஆண்டுகாலம் திராவிட மாடல் ஆட்சியை நடத்தும் எங்களது இளம் தலைவர், எங்களது சின்னவர், துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, எங்களது அவை முன்னவர் அவர்களையும், அரசுக் கொறடா அவர்களையும், அனைத்து அமைச்சர் பெருமக்களையும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் வணங்குகிறேன். வங்கக் கடலில் துயிலும் என் தங்கத் தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி, என்னை ஈன்றதாய், தந்தையையும், மறைந்த எனது மனைவி உமா மகேஸ்வரி அவர்களையும் வணங்கி, எனது அரசியல் ஆசான் ஆ.தா. தங்கமுத்து அவர்களுக்கும், மாவட்டக் கழகச் செயலாளர் வைரமணி அவர்களுக்கும், திருரங்கம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், கழக நிர்வாகிகளுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திருரங்கம் பகுதியில் நகரப் பேருந்து நிலையம் மற்றும் காவிரி ஆற்றின் குறுக்கே சுமார் 106 கோடி மதிப்பில் புதிய பாலம் அமைத்துக் கொடுத்ததற்கு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். கண்ணுடையான்பட்டி, அயிலாப்பேட்டை, எட்டரை, இனாம்குளத்தூர், சோமரசம்பேட்டை மற்றும் வடக்கு சேர்ப்பட்டி ஆகிய அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் கட்டடம் வழங்கிய பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி, போற்றி, போற்றி என்று போற்றி, என் ஸ்ரீரங்கம் தொகுதி, குமார வயலூர் முருகன் கோயிலுக்கு 4 கோடி செலவில் கும்பாபிஷேகம் நடத்திய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கு போற்றி, போற்றி, போற்றி. அறநிலைத் துறை அமைச்சர் அவர்கள், ஏற்கெனவே, என்னுடைய கேள்விக்கு பதில் தெரிவிக்கும் போது, இப்பகுதியில் திருமண மண்டபம், பேருந்து நிலையம், நீர்த் தேக்கத் தொட்டி போன்றவை அமைத்துத் தரப்படும் என்று தெரிவித்திருக்கிறீர்கள். இப்பணிகளுக்கு விரைவில் அடிக்கல் நாட்டி, அப்பணிகளை முடித்துத் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

### ஆசியாவிலேயே முதல் வைணவத் திருத்தலம்

ஆசியாவிலேயே முதல் வைணவத் திருத்தலம் ஸ்ரீரங்கம். 108 திவ்ய தேசங்களில் முதல் திவ்ய தேசம் ஸ்ரீரங்கம் ஆகும். ஸ்ரீரங்கம் கோயிலுக்கு வரும் வாகனங்கள், சுற்றுலா வாகனங்கள் மற்றும் தனியார் பேருந்துகளால் வாகன நெரிசல் ஏற்படுவதால், அதற்கென தனியாக பேருந்து நிலையம் அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். ஸ்ரீரங்கத்தில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். உள்ளூர் மற்றும் வெளியூர் பக்தர்கள் அதிகமாக வருகின்ற காரணத்தினால் போதிய கழிப்பறை இல்லாத காரணத்தினால் நவீன கழிப்பறையை அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திருரங்கம் பகுதியில் வெள்ளித்திருமுத்தம் என்கின்ற கிராமத்தில் 330 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் கோயிலுக்கு மட்டும் 26 ஏக்கர் உள்ளது. மீதி இடம் அங்குள்ள அர்ச்சகர், அய்யர், அய்யங்கார் மற்றும் அனைத்து சமுதாயமும் பயன்படுத்தி வருகிறது. அங்கு பரம்பரையாக குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்கு சட்ட வல்லுநர்களை கலந்து அடிமனைப் பட்டா வழங்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதே அடிமனை பிரச்சினை திருவானைக்காவல் பகுதியிலும் இருக்கிறது. அங்கும் அடிமனைப் பிரச்சினையை தீர்த்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். ஸ்ரீரங்கம், திருவானைக்காவல், வயலூர், திருப்பராய்த்துறை, பெட்டவாய்த்தலை, தேவஸ்தானம், மற்றும் சோமரசம்பேட்டை ஆகிய ஊர்களில் தேரோடும் வீதிகளில் மின்சார கம்பிகளை பூமிக்கு அடியில் அமைத்துத்தரும்படி கேட்டுக் கொள்கிறேன். கிளிக்கூடு, உத்தமசீலி, பனையபுரம், திருவளர்சோலை, கொண்டயம்பேட்டை, ஸ்ரீரங்கம் மற்றும் மேலூர் ஆகிய ஊர்களில் செங்கல் சூளைக்குத் தேவையான வண்டல் மண் எடுப்பதற்கு சட்டத்திற்கு உட்பட்டு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஸ்ரீரங்கம் நகர்புற பகுதியில் புதிய அரசு மேல்நிலைப்பள்ளி அமைத்துத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். ஸ்ரீரங்கம் பகுதி டாக்டர் ராஜன் நடுநிலைப்பள்ளி, முத்தப்புடையான்பட்டி, கே.பெரியப்பட்டி, மரனூர், பெரியப்பட்டி, நவலூர் குட்டப்பட்டு ஆகிய ஊர்களிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரமுயர்த்தி தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

### சித்த மருத்துவமனையை சீர்படுத்துக!

திருவரங்கம் தொகுதி கண்ணுடையான்பட்டி மற்றும் சமுத்திரம் ஆகிய ஊர்களிலுள்ள தரைப்பாலங்களை மேம்பாலமாக தரமுயர்த்தி தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இத்திட்டம் 110 விதியின் கீழ் 13 ஆண்டுகாலமாக கிடப்பிலே உள்ளது. சோமரசம்பேட்டையில் இயங்கி வரும் சித்த மருத்துவமனை பழுதடைந்த நிலையி லுள்ளது. அதை 25 படுக்கைகள் கொண்ட நவீன சித்த மருத்துவமனையாக தரமுயர்த்தித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். இனாம்குளத்தூர், சோமரசம்பேட்டை, பெட்டவாய்த்தலை, குழுமணி, மரவனூர் ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள மருத்துவர் மற்றும் செவிலியர்களை பணியமர்த்தி, மேலும், அதி நவீன கருவிகளான Scan, Xray, Echo போன்ற கருவிகளை வாங்கித்தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வயலூர் கோயிலுக்குச் செல்லும் மாற்றுவழி சாலையான கீழவயலூரிலிருந்து வயலூருக்கு வெட்டிப் பாதை 60 அடி சாலையாக மாற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். கரூர் bypass சாலை கம்பரசம்பேட்டையிலிருந்து பெட்டவாய்த்தலை வரை நான்கு வழி சாலை அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். குழுமணி வாரச் சந்தையை புதிய கட்டடம் கட்டி நவீன சந்தையாக மாற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். திருச்சி மாவட்டத்தின் மிக முக்கிய சுற்றுலா தலமான முக்கொம்புக்கு மிருககாட்சி சாலை, மான் கண்காட்சி சாலை இவைகளையெல்லாம் அமைத்து தரும்படி முக்கொம்பைச் சீர்படுத்தித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

முக்கொம்பு அணையின் காவேரி பாலம் கீழ்த்தளம் சிதிலமடைந்து உள்ளது. ஐயா, நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு 60 கோடியிலே shutter பொருத்தினார், அது அருமையாக நன்றாக வேலை செய்து கொண்டிருக்கிறது. இப்பொது அடித்தளம் பழுதடைந்து இருக்கின்ற காரணத்தினால் அடித்தளத்தை சீரமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். அந்தநல்லூர் ஒன்றிய விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையான பெட்டைவாய்த்தலையிலிருந்து காமநாயக்கன் பாளையம் வரை உள்ள ராமவாத்தலை வாய்க்காலை கொறம்பில் ஒரு கிலோமீட்டருக்கு தடுப்பணைக் கட்டித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கம்பரசம்பேட்டை, முத்தரசநல்லூர், அல்லூர், பழூர், கடியாக்குறிச்சி, பெரியகருப்பூர், சின்னகருப்பூர், அந்தநல்லூர், திண்டுக்கரை ஆகிய கிராமங்களிலுள்ள விவசாயகளின் பாசனத்திற்கு பயன்படும் புதுவாத்தலை வாய்க்காலுக்கு இருபுறமும் தடுப்பணைக் கட்டித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றிய அரசை சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்க வலியுறுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன். முத்தரையர், முக்குலோத்தோர், நாடார், நகர்ப்புற செட்டியார், கவுண்டர், கோனார், உடையார் போன்ற சமுதாயத்தினருக்கும் இட ஒதுக்கீடு வழங்குமாறுக் கேட்டுக்கொள்கிறேன்.

### நீர்த் தேக்கத் தொட்டி சீர்படுத்துக!

சிறுகமணி பேரூராட்சியில், நீர்தேக்கத் தொட்டி கட்டி 35 ஆண்டு காலமாக பழுதடைந்து விட்டது. ஆகவே, அங்கு புதிய நீர் தேக்கத் தொட்டிக் கட்டி புதிய pipeline அமைத்துத்தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அதவத்தூர் ஊராட்சி அதவத்தூரில் கால்நடை மருத்துவமனையை தரமுயர்த்தி மாவட்ட கால்நடை மருத்துவனையாக தரமுயர்த்தும்படி கேட்டுக் கொள்கிறேன். அரியாவூர் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைத்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன். திருச்சி மாநகராட்சி விரிவாக்க திட்டத்திலிருந்து 80 சதவிகிதம் விவசாய நிலங்களை கொண்ட அதவத்தூர், வயலூர் ஆகிய ஊராட்சிகளுக்கு விலக்கு அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். கிளிக்கூடு, உத்தமசீலி, பனையபுரம், திருவளர்சோலை, கொண்டயம்பேட்டை, ஸ்ரீரங்கம், மேலூர் பகுதி விவசாயிகளின் பாசனத்திற்கு பயன்படும் நாட்டுவாய்க்காலை முக்கொம்பு தலைப்பு அணையில் சேர்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அந்தநல்லூர் ஒன்றியம் வாழை குளிரூட்டும் நிலையம் பழுதடைந்த நிலையிலுள்ளது.

அந்தப் பழுதினை நீக்கிக் கொடுத்தால் அப்பகுதியிலுள்ள விவசாயிகள் பயன் பெறுவார்கள். மேலும், அந்த வாழை குளிரூட்டும் நிலையத்தை நவீனப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

### ஆரம்ப சுகாதார நிலையம்

போதாவூர், புலியூர், எட்டரை, போசம்பட்டி, கோப்பு, குழுமணி, வியாழன்மேடு ஆகிய பகுதிகளில் பூக்கள் சாகுபடி அதிகமாக நடைபெறுவதன் காரணமாக, போதாவூரில் scent factory அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். புலியூரில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். குழுமணி அல்லது கோப்பு பகுதியில் துணை மின் நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

தற்போது ஜல்லிக்கட்டு போட்டிகளில் மாடுகளுக்கு online token வழங்கப்படுகிறது. ஜல்லிக்கட்டிற்கு online token கொடுத்தால் சரியாக வராது. ஏனெனில், ஜல்லிக்கட்டு மாடு வளர்ப்போருக்கு அவ்வளவாக கணினி இயக்கமுறைகள் தெரியாது. எனவே, online வசதியை பயன்படுத்த இயலாது. எனவே, கை டோக்கன் முறையைப் பின்பற்றினால் நன்றாக இருக்கும். மேலும், ஜல்லிக்கட்டு போட்டியில் ஈடுபடும் மாடுபிடி வீரர்களுக்கு காயம் மற்றும் உயிர்ச் சேதம் ஏற்படுமேயானால், அவர்களுக்கு கருணை அடிப்படையில் தகுந்த நிதியுதவி வழங்கிட வேண்டுமென்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையக் கேட்டுக்கொள்கிறேன்.

'தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும்.' 2026ல் மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமையும்; (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் கழகத் தலைவர் ஆட்சியமைப்பார். முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. வாழ்க தமிழகம், வெல்க தமிழகம். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு மொ.பழனியாண்டி பேசினார்.

சேலம் மத்திய மாவட்ட தி.மு.க புதிதாக நியமிக்கப்பட்ட ஒன்றிய, பகுதி.நகர பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் கலைஞர் மாளிகையில் மாவட்ட கழக செயலாளர். அமைச்சர். இரா. இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில். கழக செய்தி தொடர்பு குழு இணைச்செயலாளர். தமிழன் பிரசன்னா, மாநில இளைஞரணி துணை. செயலாளர். பி.எஸ். சீனிவாசன், மாவட்ட அமைப்பாளர். அருண்பிரசன்னா மாநகர அமைப்பாளர். கேபிள். சரவணன். மாவட்ட துணை அமைப்பாளர்கள். இப்ராகீம், இளஞ்செழியன். கார்த்திகேயன். பிரசன்ன ரமணன், லேகேஸ். கௌதமன், மாநகர துணை அமைப்பாளர்கள். சிலம்பம் கோபி.எம்.வெங்கடேசன். சிவராஜ்.சுகைல்ரஹ்மான், கிரிதரன். ஆகியோர் கலந்து கொண்டனர்.